**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 228/2021</u>**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW–5)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கென்னடி | தொழில் | | **காவல் உதவி ஆணையர்** |
| த/பெ. | : | **குழந்தைசாமி** | **ஊர்** | | **திருச்சி** |
| வயது | : | 53/26 | மாவட்டம் | | **திருச்சி** |

**<u>08.04.2026</u>**

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் தற்போது திருச்சி கே.கே. நகர் காவல் உதவி ஆணையராக பணியாற்றி வருகிறேன்.

2) கடந்த 21.12.2018 ஆம் தேதி திருக்காட்டுப்பள்ளி வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது, காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் என்பவரிடம் சுக்காம்பாரை சேர்ந்த ராஜாங்கம் என்பவர் கொடுத்த புகாரை பெற்று, தோகூர் காவல் நிலைய குற்ற எண்.119/2018, ச/பி. 279, 304(a) இதச கீழ் அவர் பதிவு செய்து என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **(முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** காலை 9.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சப்பானி மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்ரைய தினமே சாட்சிகள் ராஜாங்கம் , ராஜசேகர் மற்றும் மகசர் சாட்சிகளை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) திருச்சி ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து இறந்த நபரான துரைசாமி என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் **(துரைசாமியின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) விபத்தில் இறந்துபோன நபரின் சடலத்தை பிணக்கூராய்வு செய்வதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெகதீசன் என்பவர் மூலம்

ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். பின்பு பட்டியல் சாட்சிகள் 5 முதல் 10 வரையானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையன தெரியவந்து, எதிரியை தேடி வந்த நிலையில், 21.12.2018ம் தேதி 13 மணிக்கு தோகூர் காவல்நிலையத்தில் சரணடைந்த இவ்வழக்கின் எதிரி குமரவேல் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தேன்.

5) இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 81 2179 என்ற SLM என்ற நான்கு சக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை பெற வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுந்தரராமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்றேன். (TN 81 2179 என்ற SLM என்ற நான்கு சக்கர வாகனத்தின் **மோட்டார் வாகன ஆயவு அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6) இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. இனிகோராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். (**துரைசாமியின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிரேத பரிசோதனை செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் எடுத்து சென்ற SSI ஜெகதீசன் அவர்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 15.07.2019ம் தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பு அளிக்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படாததால், குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.